DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 11/2021 Crime No. - Station -

| Name | Pw-1- ஜெகநாதன் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.07.2025 |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் ஈரோடு விரைவு நீதிமன்றத்தில் காசோலை குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். ஈரோடு விரைவு நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஒரு வழக்கு மட்டும் மனோகரன் என்பவரின் பெயரில் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு விசாரணை முடிந்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையானது எதிரி எனக்கு அனுப்பிய 06.12.2019 ம் தேதிய சட்ட அறிவிப்பிற்கு பின்னிட்டு தான் நான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

வழக்கு காசோலைகள் அனைத்தும் for New Life Constructions Proprietor என்கிற பெயரில் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி for New Life Constructions Proprietor வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால், சரிதான். என்னிடம் பணம் வாங்கியது சந்திரன் என்பவர் ஆவார்.

நான் அனுப்பிய 08.05.2020 ம் தேதிய வழக்கறிஞர் சட்ட அறிவிப்பில் "You are carrying on construction work in the name and style of " for New Life Constructions as its proprietor என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். காசோலையில் எழுதிய மற்றும் கையொப்பமிட்டது வெவ்வேறு பேனா என்றால் சரியல்ல. காசோலையிலுள்ள பண விவரம் மற்றும் கையொப்பமானது ஒரே பேனாவால் எழுதப்பட்டது. காசோலை தேதி மட்டும் வேறு ஒரு பேனாவால் எதிரி எனக்கு எழுதி கொடுத்தார். நான் சொல்வது தவறு என்றும் காசோலையில் உள்ள கையெழுத்து மற்றும் பண விவரம் வெவ்வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

எதிரி என் மீது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு எதிரி என் மீது சித்தோடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல. ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாருக்காகத்தான் சித்தோடு காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள். விசாரணையின்போது நான் ஏதேனும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தேனா என்றால், எழுதிக் கொடுத்தேன். எதிரி என்னிடம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.11 06:08:15 +0530

கொடுத்த கையொப்பம் மட்டும் இட்ட வெற்று காசோலைகளை திரும்ப பெறுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கும்போது தான் நான் மேற்படி வழக்கு காசோலைகளை மோசடியாக நிரப்பி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. சட்ட நடவடிக்கை எதிரி எடுக்கும்போது நான் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறேன் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தேன் என்றால், சரியல்ல.

எதிரி ஒரு குறிப்பிட்ட தேதியில் எனக்கு பணத்தை திரும்ப தருவதாக சொன்னதன் அடிப்படையில் தான் நான் அப்படி எழுதி கொடுத்தேன். அவர் மேற்படி காசோலை பணத்தை திருப்பி தருகிறேன் என்று கூறியதன் அடிப்படையில் மேல் மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம் என காவல் நிலையத்தில் எழுதி தரவில்லை என்றால், சரிதான். நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றும் எதிரி என்னிடம் ரூ.5,00,000/- கடன் வாங்கும்போது ரூ.100/- க்கு ரூ.10/- வட்டி கேட்டதாகவும், அதனை எதிரி தொடர்ந்து செலுத்தி வந்ததாகவும், எதிரி என்னிடம் வாங்கிய தொகைக்கு அதிகமாக ரூ.24,00,000/- கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. எனக்கு தனியாக அலுவலகம் இருக்கிறது என்றால், சரியல்ல/ 27.12.2017 ம் தேதியன்று, சட்டத்திற்கு புறம்பாக எதிரியை 2 நாட்கள் எனது வீட்டில் அடைத்து வைத்து அசல் மற்றும் வட்டித் தொகையை கேட்டு மிரட்டி வந்தேன் என்றால், சரியல்ல. எதிரியை நான் மிரட்டியதால் தான் என் மீது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரி புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல.

எனது அலைபேசி எண். 86104 22456 என்றால், சரிதான். எனது அலைபேசி மூலம் எதிரியின் அலைபேசிக்கு அழைத்து எனது அலுவலகத்திற்கு வரச் சொன்னேன் என்றால், சரியல்ல நான் எதிரிக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பல்வேறு தொந்தரவுகள் கொடுத்ததால் தான் அவர் என் மீது மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல.

இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தில் உள்ள நடைமுறைகளை பின்பற்றாமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியில்லை. எதிரி வாங்கிய பணம் ரூ.5,00,000/- ஐ செலுத்தி விட்டார் என்றும் காசோலையை நான் திருப்பி தராமல் காலம் தாழ்த்தியும், மோசடியாக காசோலைகளை நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J — Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.11 06:08:27 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani